செய்தி வெளியீடு எண்: 72 நாள்:02.02.2021

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 02.02.2021 அன்று காலை 11.00 மணியளவில்12 வது மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழுக் கூட்டம் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவில், காணொளி வழியாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இஆப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, டாக்டர் சந்தீப் சக்சேனா, இஆப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, திருமதி. ரீட்டா ஹரிஷ் தாக்கர், இஆப., சிறப்பு செயலாளர், நிதித்துறை, திரு. கயரத் மோகன் தாஸ், இவப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (சமூககாடுகள் மற்றும் வனவிரிவாக்கம்), திருமதி. பி. ராஜேஸ்வரி, இவப., கூடுதல் தலைமை முதன்மை வனப்பாதுகாவலர் (திட்டம் மற்றும் வரவு செலவு), முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திருமதி ஜே. இன்னொசென்ட் திவ்யா, இஆப., மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம், திருமதி. கே.எம். சரயு, இ.ஆ.ப., திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் பிரிவு–1, உதகமண்டலம்,

மாவட்ட வன அலுவலர்கள் / துணை இயக்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிதியாண்டில் (2020–21) 12 வது மாநில அளவு கூட்டத்திற்கு ரூ. 86.78 கோடி (சிபமேதி ரூ. 85.53 கோடி) அளவிலான 206 திட்டங்கள், பரிந்துரைக்கு முன்வைக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டது. அப்போது, மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் கோவிட் 19 அவசர காலத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையில் இந்த அரசு நிர்வாகச் செலவைக் கணிசமாகக் குறைத்துள்ளது, இருப்பினும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிக பணம் செலுத்துகிறது. இவ்வாண்டு சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் மாநில வளர்ச்சிக் கொள்கைக்குழுவின் மூன்றாவது தரப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப குழு வல்லுநர்கள் மூலம் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை நுணுக்கமாக கண்காணிக்க பரிந்துரைத்தார்.

வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழில்துறை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு லிமிடெட், கார்பன் நியூட்ரல் தேயிலை உற்பத்தியுடன் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுதல், மேலும் 20 திறந்த சரக்கு (டீ) வண்டிகளுக்கு ஒப்புதல்

அளிக்கப்பட்டது. சுகாதார திட்டங்கள், காடு வளர்ப்பு, குடிநீர், போன்ற திட்டங்களும் இக்குழுவில் ஏற்கப்பட்டது.

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக ஒரு 'கண்காணிப்பு பலகை' உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் ஆன்லைன் செயல்முறை மூலம் திட்டங்களின் செயலாக்கம் மற்றும் மதிப்பீடு செய்யப்படுகிறது. மேலும், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்டங்களைத் திறம்பட மற்றும் விரைவாக கண்காணிப்பதற்காக வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது என மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**